

திண்டுக்கல் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் த.நெடுஞ்செழியன்கோபி ஜெயந்தி இல்லத் திருமண விழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இ. பெரியசாமி, கிழக்கு மாவட்ட செயலாளர் இ .பெ.செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்கள் விமலாதித்தன்– திவ்யதர்சினி ஆகியோரை வாழ்த்தினர். உடன் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் உள்ளார்.

## மலேசிய தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம்!

கோலாலம்பூர், செப்.1 –

மலேசிய தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம். காணொளி வாயிலாக நடைபெற்றது. சோபா மாடல் ஆட்சியின் அவலங்களும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளும். என்கின்ற தலைப்பில். மலேசியா தளபதி பேரவை. செயலாளர். ஹச்எம்.ஜெய்னுதீன். தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில். கவிச்சுடர் கவிதைபித்தன், பர்கூர் மதியழகன். அரவிந் ரமேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் மணிவண்ணன், வேல்முருகன், பரமேஸ்வரி, ஜெய் பூநிஷா, சமி. கார்த்தி, திருவாரூர் வேலாயுதம், நீடூர், அயூப் அன்சாரி, சுந்தர், சுரேஷ், சவுதி ஆசிப் அலி சேட், புரூணை உசேன், ரஹ்மத்துல்லா, சௌந்தர பாண்டியன், நிஷா, தர்மா, முகமது இஸ்மாயில், அபுதாஹீர், நாகேந்திரன், வள்ளி, சபியா பேகம், மூர்த்தி, சுந்தரம், அபுதாபி, மன்சூர், ரஞ்சித், குமார், துபாய், சேகர், உசேன் முகமது, ரவிக்குமார், ஹக்கீம் அலி. ஹனிஃபா, நூருதீன், முல்லை டிவி. ஹபீப் ரஹ்மான், வரகனேரி அசாருதீன், ராஜ் முகம்மது, சதாம் உசேன், பாரூக், தில்லை நகர் தினேஷ், கா.புருசோத்தமன், நாகேந்திரன், நிஜாம், ராஜகிரி, சாகுல் ஹமீது, கிரேசி, பூர்ணிமா, கனிமொழி கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில். ஜே. சிவானந்தம் நன்றி கூறினார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!



### சட்டத்துறை அமைச்சருடன் விதிமீறல்!

**சனாதனத்தை ஒழிப்பேன் என்று பேசிய மதுரை மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முஸ்தபா, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சட்டத்துறை அமைச்சருடன் ஆய்வு மேற்கொண்டபோது தொப்பி அணிந்திருந்தார்.**

கோயிலுக்குள் தொப்பி அணிந்து செல்லக்கூடாது என்ற விதி இருந்தும், அந்த விதியை மீறி தொப்பியுடன் கோயிலுக்குள் சென்று சட்டத்துறை அமைச்சருடன் ஆய்வு மேற்கொண்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

### ரேக்ளா பந்தயம் என்பது

# வெறும் விளையாட்டு மட்டுமல்ல; அது நமது கொங்கு மண்ணின் அடையாளம்!

### ரேக்ளா பிரியர்கள், விவசாயிகள், நாட்டு மாடு வளர்ப்போர் – இளைஞர்களுக்கு கார்த்திகேய சிவசேனாபதி வேண்டுகோள்!

கோவை, செப்.1-

ரேக்ளா பந்தயம் என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல அது நமது கொங்கு மண்ணின் அடையாளம், கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ரேக்ளா பிரியர்கள், நாட்டு மாடு காப்பாளர்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் அனைவருக்கும் கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் (SKCRF) நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி ஓர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-

சமீபகாலமாக நம்மிடையே ஏற்பட்டுள்ள சில கருத்து வேறுபாடுகள் மற்றும் மனக்கசப்புகளின் காரணமாக, காவல் நிலையங்களில் புகார் அளிப்பதும், தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தை அணுகி அனுமதி கோருவதும் போன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. நாமே தொடர்ந்து காவல் நிலையங்களையும் நீதிமன்றங்களையும் நாடும் சூழ்நிலை உருவானால், அது நாளடைவில் மிகப்பெரிய சட்டப் பிரச்சினையாக மாறி, இறுதியில் ரேக்ளா பந்தயங்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

**பாரம்பரிய விளையாட்டு!**

முன்னதாக ஜல்லிக்கட்டு தொடர்பான நிகழ்வுகளில் என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக ஒருவர் மீது ஒருவர் நீதிமன்றத்தை நாடிய சூழ்நிலையைப் பயன்படுத்தி, நமது பாரம்பரியத்தை சீர்குலைக்க நினைத்த அந்நிய சக்திகள் ஜல்லிக்கட்டுக்கே தடை ஏற்படுத்திய சம்பவத்தை நாம் மறந்துவிடக் கூடாது. அதே தவறை மீண்டும் செய்து, நமது பாரம்பரிய விளை யாட்டான ரேக்ளா பந்தயத்திற்கு நாமே பாதிப்பை ஏற்படுத்திவிட்டோம் என்ற நிலை வரலாற்றில் பதிவாகாமல் பார்த்துக்கொள்வது நமது பொறுப்பு.

**பாரம்பரியத்தின் அடையாளம் நாட்டு மாடுகள்!**

ரேக்ளா பந்தயம் என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல. அது நமது கொங்கு மண்ணின் அடையாளம். காங்கேயம் காளை இனத்தைப் பாதுகாப்பதற்கும், அதன் வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் முக்கியமான ஒரு தளமாக அது விளங்குகிறது. லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு உத்வேகத்தையும், ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு வாழ்வாதார ஆதரவையும் வழங்கும் பாரம்பரியத்துடன் இது இணைந்துள்ளது.

சிந்துவெளி நாகரிகம் முதல் சமீபத்திய கீழடி அகழாய்வுகள் வரையிலான வரலாற்றுச் சான்றுகளில், தமிழர் வாழ்வியலிலும் பண்பாட்டிலும் காளைகளுக்கு இருந்த முக்கியத்துவம் வெளிப்படுகிறது. குறிப்பாக, திமில் கொண்ட நாட்டு மாடுகள் நமது பாரம்பரியத்தின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக விளங்குகின்றன. கால நிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில், நாட்டு மாடு இனங்களைப் பாதுகாப்பதும், அவற்றின் மரபணு வளத்தைப் பாதுகாப்பதும் மிகவும் அவசியமானதாகும்.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் பாதுகாக்கப்பட்டு வரும் நமது நாட்டு மாடுகள், மெல்ல மெல்ல வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளன. இந்தச் சூழ்நிலையில், நமது ஒற்றுமை மிகவும் அவசியம். எனவே, அனைத்து ரேக்ளா அமைப்புகளின் நிர்வாகிகள், பெரியவர்கள், விவசாயிகள், நாட்டு மாடு வளர்ப்போர் மற்றும் இளைஞர்கள் அனைவரும் காவல் நிலையம் மற்றும் நீதி மன்றங்களை நாடும் நடவடிக்கைகளைத் தவிர்த்து, முதலில் தங்களுக்குள் அமர்ந்து பேசி, கருத்து வேறுபாடுகளை சுமூகமான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**காளைகளைப் பாதுகாப்பது நமது கூட்டுப் பொறுப்பு!**

சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் (SKCRF) கொங்கு மண்டலத்தின் பாரம்பரிய காங்கேயம் நாட்டு மாடு இனங்களையும், அவற்றின் முக்கிய மேய்ச்சல் நிலங்களான கொரங்காடுகளையும் பாதுகாத்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகளில் செயல்பட்டு வரும் ஒரு தொண்டு நிறுவனமாகும். நாட்டு மாடு வளர்ப்பு, பாரம்பரிய விவசாய முறைகள் மற்றும் நமது பண்பாட்டு பாரம்பரியத்தைப் பாதுகாப்பது தொடர்பாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் SKCRF, காங்கேயம் காளை இனத்தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நமது பாரம்பரியத்தையும், காங்கேயம் காளைகளையும், ரேக்ளா பந்தயத்தையும் பாதுகாப்பது நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பு. கருத்து வேறுபாடுகளைத் தாண்டி, ஒற்றுமையுடன் செயல்பட்டு நமது பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டு என்று கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் (SKCRF) நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி ஓர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# தேரூர் பேரூர் தி.மு.க.நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!






கன்னியாகுமரி, செப்.1 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், தேரூர் பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 28.08.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் தேரூர் பேரூர் செயலாளர் G.முத்து தலைமையில், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். மதியழகன் முன்னிலையில் தேரூர், கவிமணி நூல் நிலை யத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகள் என்.ஆறுமுகம், வே.முருகன், பேரூர் துணைச் செயலாளர் சசி, பொருளாளர் M.ஞானசேகர், ஒன்றிய பிரதிநிதிகள் பெருமாள், பாபு, அருள்கண்ணன், மு. தம்புரான், M.பழனிவேல், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் A.கவிதன், J.ஆன்றோ போஸ்கோ, கழக நிர்வாகிகள் முரளி, ஜெயசிங், சுரேஷ், சிவா, கற்பக பெருமாள், மு.புலமாடன், இசக்கிமுத்து உட்பட ஒன்றிய மற்றும் பேரூர் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

தீர்மானம்: 1 தேரூர் பேரூராட்சிக்குட்பட்ட புதுக்கிராமம் காலனி, மகாராஜபுரம், சேதுலெட்சுமி மகாராணிபுரம், கஸ்தூரி பாய் கிராமம், சுப்பிர மணியபுரம், கண்ணன்பதி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களது வீட்டிற்கான பட்டா அவர்களது பெயரில் அரசு வழங்கிட கேட்டு தேரூர் பேரூர் தி.மு.க சார்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்: 2 தேரூர் பேரூராட்சி கண்ணன்பதி பகுதியில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே அதனை உடனடியாக சரி செய்து தரும்படி மாவட்ட நிர்வாகத்திடம் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம்: 3 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 4 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தேரூர் பேரூர் தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

# நாடு முழுவதும் முதுநிலை நீட் தேர்வு -2.63 லட்சம் டாக்டர்கள் எழுதினர்!

புதுடெல்லி, செப்.1-

நாடு முழுவதும் பலத்த பாதுகாப்புடன் நேற்று முன்தினம் நடந்த முதுநிலை நீட் தேர்வில் 2.63 லட்சம் டாக்டர்கள் தேர்வெழுதினர். நாடு முழுவதும் மருத்துவ மேற்படிப்புகளுக்கான முதுநிலை நீட் தேர்வு நேற்று முன்தினம் நடந்தது. 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 339 நகரங்களில் அமைக்கப்பட்ட 1,111 தேர்வு மையங்களில் தேர்வுகள் நடைபெற்றன.

நடப்பாண்டு முதுநிலை நீட் தேர்வுக்கு 2,73,096 டாக்டர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், 2,65,980 பேர் தேர்வில் பங்கேற்றனர்.

இதில் 2,63,535 பேர் வெற்றிகரமாக தேர்வு எழுதி முடித்துள்ளனர். தேர்வை மேற்பார்வையிட 2,527 ஆசிரியர்கள் கண்காணிப்பாளர்களாகவும், டீன்கள், இயக்குநர்கள், மருத்துவ கண்காணிப்பாளர்கள் மற்றும் மூத்த பேராசிரியர்கள் உள்ளிட்ட 700க்கும் மேற்பட்டோர் பறக்கும் படை உறுப்பினர்களாகவும் பணியமர்த்தப்பட்டனர்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் மாவட்டம் சீதாபுராவில் உள்ள 2 தேர்வு மையங்களில் மட்டும் மின்விநியோகம் பாதிக்கப்பட்டதாலும், சில தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாகவும் மாணவர்கள் தேர்வு எழுதுவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் மறுதேர்வு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதன்படி, இந்த 2 மையங்களில் தேர்வெழுதிய மாணவர்களுக்கு வரும் செப்டம்பர் மாதம் 5ம் தேதி மறுதேர்வு நடத்தப்படும். இதில் 2,445 தேர்வர்கள் மீண்டும் தேர்வெழுத உள்ளனர் என தேசிய மருத்துவ அறிவியல் தேர்வுகள் வாரியம் தெரிவித்துள்ளது.

### தென் மாவட்டங்களுக்குச் செல்லும்

# 14 சிறப்பு ரெயில் சேவைகள் நீட்டிப்பு!

சென்னை, செப். 1-

தாம்பரத்தில் இருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் வாராந்திர 14 சிறப்பு ரெயில்கள் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. இது குறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருக்கும் முக்கிய ரெயில் சேவைகள் குறித்த தகவல்கள் பின்வருமாறு;

தாம்பரத்தில் இருந்து போடிநாயக்கனூருக்குச் செல்லும் சிறப்பு விரைவு ரெயில் (எண்: 06059) வரும் செப்டம்பர் 12 முதல் 26 ஆம் தேதி வரையிலும், போடிநாயக்கனூர் தாம்பரம் இடையேயான வாராந்திர விரைவு ரெயில் (எண்: 06060) செப்டம்பர் 13 முதல் 27 ஆம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் கன்னியாகுமரி (வெள்ளிக்கிழமை) விரைவு ரெயில் (எண்: 06045) செப்டம்பர் 4 முதல் 25 ஆம் தேதி வரையிலும், கன்னியாகுமரி எழும்பூர் நிலையம் வரையிலான (ஞாயிற்றுக்கிழமை) விரைவு ரெயில் (எண்: 06046) செப்டம்பர் 6 முதல் 27 ஆம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மங்களூரு சென்னை சென்ட்ரல் இடையேயான விரைவு ரெயில் (எண்: 06126) வரும் செப்டம்பர் முதல் 28 ஆம் தேதி வரையிலும், சென்னை எழும்பூர் மங்களூரு இடையிலான விரைவு ரெயில் (எண்: 06125) மற்றும் போத்தனூர் சென்னை சென்ட்ரல் இடையேயான விரைவு ரெயில் (எண்:06028) ஆகியவை செப்டம்பர் 8 முதல் 29 ஆம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மேட்டுப்பாளையம் விரைவு ரெயில் (எண்: 06030) செப்டம்பர் 6 முதல் 27 ஆம் தேதி வரையிலும், மேட்டுப்பாளையம் திருநெல்வேலி விரைவு ரெயில் (எண்: 06029) செப்டம்பர் 7 முதல் 28 ஆம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி தாம்பரம் விரைவு ரெயில் (எண்: 06166) செப்டம்பர் 6 முதல் 27 ஆம் தேதி வரையிலும், திருநெல்வேலி தாம்பரம் விரைவு ரெயில் (எண்: 06070) செப்டம்பர் 3 முதல் 24 ஆம் தேதி வரையிலும், தாம்பரம் திருநெல்வேலி விரைவு ரெயில் (எண்: 06069) செப்டம்பர் 4 முதல் 25 ஆம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுடுகாட்டில் ரவுடி படுகொலை - கேளம்பாக்கத்தில் பயங்கரம்!

# த.வெ.க. ஆட்சியில் தொடரும் கொலை கொள்ளை!

திருப்போரூர். செப்.1

சென்னை அருகே கேளம்பாக்கத்தில் உள்ள மயானத்தில் பிரபல ரவுடி வெட்டி படுகொலை செய்யப்பட்டு உள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சென்னையில் நடந்த கொலைக்கு பழிக்குப் பழியாக இது நடந்துள்ளதா என்று போலீசார் விசாரிக்கின்றனர். சென்னை அருகே உள்ள கேளம்பாக்கம் ஜோதி நகரை சேர்ந்தவர் ஷாகுல் அமீது (27). இவர் அங்குள்ள கே.எஸ்.எஸ்.நகரையொட்டி உள்ள மயானம் அருகே வெட்டி படுகொலை செய்யப்பட்டு கிடந்தார். அவரது முகம் கொடூரமாக சிதைக்கப் பட்டிருந்தது. இதுகுறித்து அறிந்ததும் கேளம்பாக்கம் போலீஸ் உதவி ஆணையர் ஜான் விக்டர், இன்ஸ்பெக்டர் தமிழன்பன் ஆகியோரின் தலைமையில் போலீசார் சென்று விசாரித்துவிட்டு பின்னர் ஷாகுல் அமீது உடலை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். ஷாகுல் அமீது மீது பல்வேறு கொலை, கொள்ளை மற்றும் கொலை மிரட்டல், செயின் பறிப்பு, கஞ்சா விற்பனை உள்பட 20க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளது. இவர் கிரேடு ஒன்று ரவுடி பட்டியலில் உள்ளார். சென்னை கொளத்தூரை சேர்ந்த பிரபல ரவுடி ஒருவருடன் கூட்டாளியாக இருந்து, பல்வேறு குற்றச் சம்பவங்களை செய்துள்ளார். இதன்பின்னர் அவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனியாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுள்ளார். கடந்த 10 நாட்களுக்கு முன் சிறைக்கு இருந்து வெளியே வந்துள்ளார். இதன்பிறகு நண்பர்களுடன் நேற்று மாலை 6.30மணியளவில் மயான பகுதியில் மது அருந்தியுள்ளார். அப்போது ஷாகுல் அமீதை மர்ம நபர்கள் முகம் சிதைத்து கொலை செய்துவிட்டு தப்பியுள்ளனர். இவ்வாறு தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கேளம்பாக்கம் போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர். ஷாகுல் அமீதை கொலை செய்ய பயன்படுத்திய பொருட்கள், பைக்குகள், ரத்த மாதிரிகள் உள்பட பல்வேறு தடயங்களை போலீசார் சேகரித்து ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கொளத்தூர் ரவுடியுடன் சேர்ந்து ஷாகுல் அமீது நடத்திய ஒரு கொலை தொடர்பாக அவரை பழிக்குப்பழியாக கொலை நடந்திருக்கலாம் என்று தெரிகிறது. ஏற்கனவே கொலை செய்யப்பட்ட நபரின் புகைப் படத்தை மர்ம நபரில் ஒருவன் செல்போனில் வைத்திருந்து தனது கூட்டாளிகளுடன் ஷாகுல் அமீது பழிக்குப் பழியாக கொலை செய்ய காத்திருந்ததும் முன்னர் செய்த கொலையை போல் இவரையும் முகம் சிதைத்து கொலை செய்வோம் என்று அந்த மர்ம கும்பல் சபதம் எடுத்து ஷாகுல் அமீதை கண்காணித்து வந்ததாகவும் தெரிகிறது. எனவே, பழிக்குப்பழியாக கொலை நடந்ததா தனியாக தொழில் நடத்தியதால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக கொலை நடந்துள்ளதா என்று பல்வேறு கோணங்களில் விசாரிக்கின்றனர். கொளத்தூர் ரவுடியை பிடிக்க தனிப்படை போலீசார் விரைந்துள்ளனர்.